

# மானுக்குப் பிணை நின்ற படலம்

## சீறாப்புராணம்

# சீறாப்புராணம்

- சீறாப்புராணம் என்பதற்கு நபிகள் நாயகத்தின் வாழ்க்கை வரலாறு என்று பொருள்.
- சீறாப்புராணத்தில் உள்ள காண்டங்களின் எண்ணிக்கை = மூன்று.
- இந்நூல் விலாதத்துக் காண்டம் (பிறப்பியற் காண்டம்), நுபுவ் வத்துக் காண்டம் (செம்பொருட் காண்டம்), ஹிஜ்ரத்துக் காண்டம் (செலவியற் காண்டம்) என்ற மூன்று பெரும் பிரிவுகளை உடையது.
- இந்நூலில் 5027 விருதப்பாக்கள் உள்ளன.
- பெருமானார் பிறந்ததும் இளமை நிகழ்வுகளும் திருமணமும் விலாதத்துக் காண்டத்தில் கூறப்பட்டுள்ளது.
- வானவர் ஜிப்றாயில் மூலம் திருமுறை நபிகள் பெருமானார்க்கு அருளப்பட்டதும் அதன்பின் மக்கத்தில் நடந்தவையும் நுபுவ்வத்துக் காண்டத்தில் பேசப்படுகின்றன.
- மக்கத்தை விட்டுப் பெருமானார் மதீனம் சென்றதும் தீன் நிலை நிறுத்தற்காக நிகழ்ந்த போர்களும் பிறவும் ஹிஜ்றத்துக் காண்டத்தில் வரையப்பட்டுள்ளன.

# சீறாப்புராணம்

1. விலாதத்துக் காண்டம்

2. நுபுவ்வத்துக் காண்டம்

3. ஹிஜிறத்துக் காண்டம்

## 7. சீறாப்புராணம் - மானுக்குப் பிணை நின்ற படலம்

தமிழில் எழுதப்பட்ட தலைச்சிறந்த பெருங்காப்பியங்களில் சீறாப்புறாணம், சீறத் என்றால் வாழ்க்கை வரலாறு, புராணம் புனிதக்கதை என்று பொருள்படும். இசுலாமிய இலக்கியம் சீறாப் புராணம் ஆகும். இந்நூல் இறைதூதர் நபிகள் நாயகத்தின் வாழ்க்கை வரலாற்றை மையமாகக் கொண்டு தமிழ்மரபுகளைப் பின்பற்றி எழுதப்பட்ட ஒரு காவியம்.

இதனை இயற்றியவர் 18-ம் நூற்றாண்டில் வாழ்ந்த உமறுப் புலவர் ஆவார், அதே காலத்தில் வாழ்ந்த வள்ளல் சீதக்காதி, அபுல்காசிம் ஆகியோரின் ஆதரவை உமறுப் புலவர் பெற்றார். வள்ளல் சீதக்காதியின் பெருமையைச் "செத்தும் கொடுத்தான் சீதக்காதி" என்ற சொற்றொடர் விளக்கும். இந்நூல். இரண்டு பாகங்களில் அமைந்துள்ளது.

அரபு நாட்டில் தோன்றிய நபிகள் நாயகத்தின் வரலாற்றையே எழுதினாலும் அதைத் தமிழ் மணம் கமழ இயற்றியுள்ளார் உமறுப்புலவர். மக்கா, மதினா நகரங்களை மதுரை நகரத்தின் சாயலில் படைத்துள்ளார். முரசறைந்து செய்திகளைத் தெரிவித்தல், ஆரத்தி எடுத்தல், திலகமிட்டு வரவேற்று முதலான தமிழ்ப் பழக்கவழக்கங்களை அரபு நாட்டுப் பழக்க வழக்கங்களாக காட்டுகின்றார்.

மகளிர் வாழ்க்கையை ஏழு பருவங்களாகப் பிரிக்கும் தமிழ் மரபை நபிகள் நாயகத்தின் மகள் பாத்திமாவின் திருமணத்தின்போது சுட்டிச் செல்கின்றார் முதற்பாகத்தில் 45 படலங்கள், இரண்டாவது பாகத்தில் 47 படலங்கள் என் நூல் முழுவதும் 92 (45+47) படலங்கள் இடம்பெற்றுள்ளன.

இந்நூலில் 5027 பாடல்கள் அமைந்துள்ளன. சீறாப்புராணத்தில் இடம்பெற்றுள்ள மானுக்குப் பிணை நின்ற படலம் எனும் பகுதி நமக்கு பாடப்பகுதியாக அமைந்துள்ளது.

மானுக்குப் பிணை நின்ற படலம்

1. குயினிழல் பரப்பச் செவ்விக் கொழுந்தடை நறவஞ் சிந்தும்
வயிரவொண் வரையின் விம்மி வளர்ந்ததிண் புயத்து வள்ளல்
செயிரறு மறையின் றீஞ்சொற் செழுமழை பொழிந்து தீனின்
பயிர்வளந் தேறச் செய்து பரிவுட னிருக்கு நாளில்.

2. அரியினஞ் செறிந்த போன்ற அறபிகள் குழுவி னாப்ப
ணொருதனிச் சீய மொப்ப வுடையவன் றூதர் செல்வத்
திருநகர்ப் புறத்து நீங்கிச் செழுமுகின் முடியிற் றாங்கி
மருமலர் செறியுஞ் சோலை சூழ்ந்ததோர் வரையைச் சார்ந்தார்.

3. காலினிற் கழலு நீண்ட கரியகா ளத்தின் வீக்கும்
பாலினில் வலையுங் கையிற் பருவரைத் தனுவுங் கூருங்
கோல்வெறி நணியுந் தோளிற் கூன்பிறை வாளு மென்மை
வாலுடைப் பறவை சேர்த்துங் கண்ணியு மருங்கிற் கொண்டோன்.

4. குறுவெயர்ப் புதித்த மெய்யுங் கொழுந்தசை மணத்த வாயும்
பறிதலை விரிப்புங் கூர்ந்த படுகொலை விழியு மாக
வற்பினி லறபி வேட னடவியிற் றொடர்ந்தோர் மானைக்
கறுவொடும் வலையிற் சேர்த்திக் கட்டிவைத் திருப்பக் கண்டார்.

5. குழைகுழைத் தெரியுஞ் செந்தேன் கொழுமலர்க் காவை நோக்கார்
பொழிமலை யருவி நோக்கார் புறத்துநன் னிழலை நோக்கார்